IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, RANIPET,
VELLORE DISTRICT.

01.04.2019

Case No. OS. 211 /2010 PW1 வெங்கடசாமி

1, 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.தொடர்ச்சி

நான் 1990 வரை பயிர்வேலை செய்தேன். அதன் பிறகு சென்னையில் செக்யூரிட்டி வேலை செய்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு 54 வயது. விவசாயத்தில் இருந்து வந்த வருமானத்தில தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது. உபரி வருமானம் என்ன என்று குறிப்பிட்டு சொல்லவிலலை. எல்லா வருமானத்தையும் பாஸ்கர்ரெட்டியார் தான் பார்த்து வந்தார். நாங்கள் உடல் உழைப்பு மட்டும் தான். என்ன வருமானம் வரும் என்று தெரியும். அந்த விவரத்தை வழக்கிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. வந்த வருமானத்தை அவர் எங்களிடம் கணக்கு சொல்லமாட்டார். அந்த விவரத்தை நான் என் வழக்கிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. வா.சா.ஆ.1 என் அப்பா 1964ல் கிரையம் வாங்கிய பத்திரம். எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினார் என்று தெரியாது. என் அப்பா காலமான போது சுமார் 20, 25 ஏக்கர் நிலம் இருந்தது. என் அப்பா இருக்கும் போது அவர் எந்த இடத்தையும் விற்கவில்லை. என் அப்பா எவ்வளவு இடம் வாங்கினார் என்று என்னால் சரியாக சொல்லமுடியாது. என் அப்பா இறந்த பிறகு எவ்வளவு விற்றோம் என்று விஸ்தீரணம் எனக்கு தெரியாது. ஆரணியில் உள்ள 4 வீட்டை விற்றுவிட்டார். நிலம் சுமார் 10 ஏக்கருக்கு மேல் விற்றிருப்பார். விற்றது போக 6, 7 ஏக்கர் நிலம் தான் இருந்தது. அந்த கிரயப்பத்திரங்களில் நாங்கள் கையெழுத்து போட்டுள்ளோம். என் அப்பா எங்களுக்கு தெரியாமல் 2 1/2 ஏக்கர் விற்றுள்ளார். பாஸ்கர்ரெட்டியார் எங்களுக்கு தெரியாமல் 3 1/2 ஏக்கர் விற்றுள்ளார். அப்போது எனக்கு 24 வயதிருக்கும். அந்த சொத்தை எல்லாம் கடனுக்காக தான் விற்றோம் என்றால் தெரியாது. அவர் கையெழுத்து போடச்சொன்னார் போட்டோம. அந்த பத்திர நகல்களை நாங்கள் வாங்கி பார்த்துள்ளோம். ஒரு சில பத்திரத்தின் நகல் என்னிடம் உள்ளது. அவர் தனிப்பட்ட முறையில் விற்ற கிரயங்களை நாங்கள் கேள்வி கேட்கவில்லை என்றால் இல்லை. குடும்ப

அவசியத்திற்காக விற்றுள்ளார். வா.சா.ஆ.2, முதல் வா.சா.ஆ.7 என் அப்பா கிரையம் வாங்கியது. அதில் அவர் பயிர் வேலை என்று தான் போட்டுள்ளது. வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9 எங்கள் குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம். அதில் குடும்ப தேவைக்காக கிரையம் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. எல்லா சொத்திற்கு பட்டா பாஸ்கர்ரெட்டி பெயரில் உள்ளது. நான் தான் வரி செலுத்திவருகிறேன். விவசாயம் நாங்கள் பார்த்ததால் வரி கட்டினோம். சொத்தை பாகம் பிரிக்கவில்லை அந்தந்த சொத்தை அவரவர்கள் பயிர் வைத்து அதில் வரும் வருமானத்தை பாஸ்கர்ரெட்டியிடம் தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லி எழுதப்பட்டுள்ளது. அதேபோல் தான் மற்ற சகோதரர்களும் பயிர் வைத்து அதில் வரும் வருமானத்தை அவரிடம் 1990 வரை கொடுத்து வந்தோம். சுமார் 14 ஆண்டுகள் கொடுத்தோம். கடன் இருக்கிறது என்று சொல்வார் எந்த கடன் விவரத்தையும் சொல்வதில்லை எங்களுக்கு தெரியாது. நாங்கள் சகோதரர்கள் தலா 2 1/2 ஏக்கர் பயிர் செய்தோம். 1980க்கு பிறகு பத்திராஜலம் ஆரணிக்கு சென்றுவிட்டார். 1979ல் பத்திராஜலம் விவசாயம் செய்து வந்த நிலத்தை விற்று அதில் வந்த பணத்தை அவர் வாங்கிய கடனை அடைத்து மீதி பணத்தை அவர் வாங்கிச் சென்றுவிட்டார். என் சகோதரருகளுக்கும் எனக்கும் விரோதம் எதுவும் கிடையாது. கடனையும் சொத்தையும் பங்கு வைத்தார் என்றால் கடனையும் பங்கு வைக்கவில்லை சொத்தையும் பங்கு வைக்கவில்லை. இந்த விவரங்கள் எல்லாம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும். அந்த விவரங்களை நான் என் பிராதிலே வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. அப்போது அந்த விவரங்கள் சொல்லவேண்டும் என்று தெரியாது. வேலூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது இதையெல்லாம் போடவேண்டும் என்று வழக்கறிஞர் சொல்லவில்லை. வழக்கறிஞர் கேட்டிருந்தால் இந்த தகவல்களை சொல்லியிருப்போம். சிவாஜி நாராயணன் என் சகோதரர்கள், சகோதரிகள், என் அம்மா மற்றும் என் மீதும் OS.212/93 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அது பி.சா.ஆ.1. இந்த வழக்கை நாங்கள் நடத்தவில்லை. பஞ்சாயத்து எதுவும் நடத்தவில்லை. அந்த விவரத்தையோ, வழக்கு குறித்தோ நான் இந்த வழக்கில் சொல்லவில்லை.

என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் என் கையெழுத்து இல்லை. சிவாஜி நாராயணன் கையெழுத்து உள்ளது. ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. இது போல் பல கையெழுத்துகள் வாங்கியுள்ளார். சொசைட்டியில் கடன் வாங்கியதற்காக கையெழுத்து வாங்குவார்.

கு.வி. தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.